பக்கங்கள் 15

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 23 புதன்கிழமை 05.02.2025 | அதிர்வு 187

## மாயமான இளைஞர் நேற்று சடலமாக மீட்பு

கண்டி, தலாத்துஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிமெட்டிய, கட்டுகித்துல பகுதியிலுள்ள ஓடையொன்றிலிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 02 ▶

# அநுரகுமார மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடைந்துள்ளது



### சம்பிக்க ரணவக்க கடும் விசனம்

“ஜனாதிபதி அநுரகுமார மீதான மக்கள் நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. மாறாக மக்களைத் திசை திருப்பி விடும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. மக்கள் அரசியலில் ஏமாற்றமடைந்துள்ளார்கள் என்றே குறிப்பிட வேண்டும்.” 02 ▶



# சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் முதன்முறையாகக் பங்கேற்ற ஜே.வி.பி.

### எதிர்க்கட்சியின் பிரதம கொறடா தெரிவிப்பு

மக்கள் விடுதலை முன்னணியினர் மற்றும் தேசிய மக்கள் சக்தியினர் முதன்முறையாகச் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்றனர் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக தெரிவித்தார். 02 ▶






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்கு வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

வழக்கைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கான திகதியிடல் என்ற ஏற்பாட்டோடு அன்றைய தினம் இந்த வழக்கு எடுக்கப்படுமாயினும் அன்றைய தினத்தில் வழக்கு சுமூகமாகத் தீர்வதற்கான சாத்தியங்கள் தென்படவில்லை என்பதுதான் நிஜ நிலைமை.

வழக்கின் எதிராளி தரப்புகள் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுக்காத வரை சுமுகமான தீர்வை நோக்கி வழக்கு நகர்வது சாத்தியமற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வரும் 8 ஆம் திகதி நடக்க இருந்தது. ஆயினும் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா மரணமானமையை ஒட்டி அந்த மத்திய குழுக் கூட்டம் கால வரையறை குறிப்பிடாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வரும் 13ஆம் திகதி மேற்படி வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படும் தினத்துக்கு முன்னர் மத்திய குழு கூடுவதற்கும் இனி வாய்ப்பு இல்லை.

முன்னர் திட்டமிட்டபடி மத்திய குழு எட்டாம் திகதி கூடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்குமானால் அன்றைய தினத்தில் எதிராளி தரப்புக்கள் இவ்விவகாரத்தை மத்திய குழுவில் கதைத்து, தங்களுக்குள் ஒருமுகப்பட்ட நிலைப்பாட்டை எடுத்து, நீதிமன்றுக்குச் சென்று இருந்தால், சில சமயங்களில் அடுத்து வரும் தவணைகளில் வழக்கு முடிவதற்கான ஏற்பாடுகளை வரும் 13ஆம் திகதி தவணையில் செய்யக்கூடிய சந்தர்ப்பம் இருந்திருக்கும்.

கட்சியின் மத்திய குழு இந்த 02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

விவகாரத்தை ஒட்டி ஒருமுகப்பட்ட நிலைப்பாட்டை எடுக்காத நிலையில், தரப்புக்கள் 13ஆம் திகதி நீதிமன்றுக்கு போய், பலதரப்பு வாதங்களையும் வைத்துப் பின்னர், பிறிதொரு திகதிக்கு வழக்கை ஒத்தி வைக்கும் சாத்தியமே இப்போது தென்படுகின்றது.

முன்னைய தவணையில் வழக்கு எடுக்கப்பட்ட போது எதிராளியாக கட்சியின் தலைவர் என்று மாவை சேனாதி ராஜா குறிப்பிடப்பட்டிருந்தார். ஆனால் அடுத்த தவணைக்கு வழக்கு எடுக்கப்படும் போது அவர் தலைவர் பதவியிலும் இல்லை,உயிரோடும் இல்லை,. அதனால் அவரது இடத்திற்குப் புதிய எதிராளியாக பதில் தலைவர் சிவஞானத்தை குறிப்பிடுவதற்கான நகர்த்தல் நடவடிக்கையை வழக்காளிகள் தரப்பு முன்னெடுக்க வேண்டி இருக்கும்.

மேலும் இந்த வழக்கில் எதிராளிகளான ஸ்ரீதரன் எம்.பி. மற்றும் குகதாஸன் எம்.பி. ஆகியோருக்காக இதுவரை காலமும் நீதிமன்றில் முன்னிலையாகி வந்த ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராஜா இனிமேல் அவர்களுக்காக இந்த வழக்கில் முன்னிலையாக மாட்டார் என்று ஒரு தகவல் தெரிவிக்கின்றது. அவர்கள் இருவர் சார்பிலும் வேறு ஒரு சட்டத்தரணி நீதிமன்றத்தில் இனிமேல் முன்னிலையாகக் கூடும்.

எது, எப்படி என்றாலும் இந்த வழக்கு அடுத்த ஓரிரு தவணைகளில் முடிவுறுத் தப்படும் என்ற நம்பிக்கை இன்னும் ஏற்படவில்லை. இதுதான் கள நிலைமை.

* * *

ஆட்சி மாறும்போது காட்சியும் மாறும் என்பது உண்மைதான் போலும்.

நேற்று இலங்கையின் சுதந்திர தினம். அந்த நாளில் தென்னிலங்கை பத்திரிகைகளை வாசித்த நண்பர் ஒருவர் ஆட்சி மாறும்போது காட்சி மாறுவது பற்றி ஒரு தகவலைச் சொன்னார்.

சுதந்திர தினத்தை ஒட்டி தென்னிலங்கை ஊடகங்களில் பல நிறுவனங்களும் சுதந்திர தின வாழ்த்துடன் கூடிய விளம்பரங்களைப் பிரசுரிப்பது வழமை. இந்தத் தடவையும் அத்தகைய விளம்பரங்கள் பிரசுரமாகின. ஆனால் வழமைக்கு மாறாக இந்தத் தடவை அந்த விளம்பரங்கள் எல்லாம் சிவப்பு நிறத்தில் அமைந்திருப்பதை அவதானிக்க முடிந்ததாக அந்த நண்பர் சுட்டிக் காட்டினார்.

சிவப்பு தரப்பினர் அதிகாரத்துக்கு வந்திருப்பதால் விளம்பரங்களும் சிவப்பாகி விட்டன. இது இலங்கையின் வழமையான தொற்று வியாதிப் போக்குதான்.

* * *

77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொரளை அனைத்துப் புனிதர் தேவாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற இறை வழிபாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய கொழும்புப் பேராயர் கர்தினால மல்கம் ரஞ்சித், தற்போதைய ஊழல் முறைகேட்டு முறைமையை அகற்றி, தேசத்திற்கு உண்மையான சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டும் என்றால் தற்போதைய அரசமைப்பை உடனடியாக நீக்கிவிட்டு புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்த வேண்டும் என ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார்.

போர் என்ற சாக்குப்போக்கில் நாட்டில் எதேச்சதிகாரம் தலைதூக்குவதை கடுமையாக விமர்சித்த மல்கம் கர்தினால் ரஞ்சித், இது ஜனநாயகத்தின் மீதான கடும் அடி என்று வர்ணித்துள்ளார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையைக் கொண்ட அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள தடையற்ற அதிகாரத்தை தலைவர்கள் தவறாக பயன்படுத்தியதன் மூலம் சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுத்துள்ளனர் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சட்டக் கட்டமைப்பானது சமாளித்துக்கொள்ளக்கூடிய இனப் பதற்றங்களையும் நீண்டகால மோதல்களாக மாற்றியமைத்து, இறுதியில் நாட்டில் அச்சம் மற்றும் உறுதியற்ற சூழலை உருவாக்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

1990 களில் இருந்து தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் ஊடக அடக்குமுறை, ஊடகவியலாளர்கள் பலவந்தமாக காணாமல் போதல், வெள்ளை வான் கலாச்சாரம் மற்றும் அரசியல் எதிரிகளை சிறையில் அடைத்தல் உள்ளிட்ட அடக்குமுறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளன என்பதையும் கர்தினால் ரஞ்சித் எடுத்துரைத்தார். கடந்த இரண்டு தசாப்தங்களாக நிலைமை மோசமடைந்துள்ள நிலையில், அழிவுகரமான யுத்தம் காரணமாக நாடு கடுமையான பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"போராட்டம் எனப்படும் மக்கள் எழுச்சியைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம், அதே எதேச்சாதிகாரப் போக்கிலேயே தொடர்ந்து செயற்பட்டு வந்தது. 1978 முதல், அரசாங்கங்கள் தங்கள் விருப்பப்படி சர்வாதிகார அதிகாரங்களைப் பயன்படுத்துகின்றன. பெரும்பாலும் சேவை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டத்தை தங்கள் நலன்களுக்கு அவை பயன்படுத்துகின்றன. அதிகாரத்தில் இருப்பவர்களுக்குப் பாதகமான நீதிமன்றத் தீர்ப்புகள் புறக்கணிக்கப்படுகின்றமையையும், நீதித்துறை நசுக்கப்படுவதையும் நாம் கண்டிருக்கிறோம். போர் என்ற போர்வையில், அதிகாரத்தில் இருப்பவர்கள் பொறுப்புக் கூறாமல் நாடாளுமன்றத்தில் தங்களின் அதிகாரத்தை சுரண்டிக் கொள்ளும் அபாயகரமான முறை உருவாகியுள்ளது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள அரசமைப்பே நாட்டின் தற்போதைய நெருக்கடிகளுக்கு மூலகாரணமாக விளங்குவதாகவும், இது ஜனநாயகத்திற்கு மரண அடி என்றும் அவர் முத்திரை குத்தினார். கர்தினாலின் கூற்றுப்படி, இந்த சட்ட அமைப்பு பயங்கரவாதம், இரத்தம் சிந்துதல் மற்றும் சட்டமின்மை ஆகியவற்றின் கலாச்சாரத்தை வளர்த்து, இறுதியில் நீதி மற்றும் நிர்வாகத்தை அரிக்கிறது.

தற்போதைய அரசமைப்பை உடனடியாக ஒழித்துவிட்டு, ஊழல், வன்முறை, சட்டமீறல் ஆகியவற்றுக்கான இடத்தை நீக்கி, அனைத்து குடிமக்களையும் சமமாக இணைக்கும் புதிய அரசமைப்பை ஸ்தாபிக்க வேண்டும் என்று அவர் உறுதியாகக் கூறினார். அத்தகைய சீர்திருத்தம் இலங்கையில் சமய, கலாச்சார மற்றும் சமூக மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் கர்தினால் நம்பிக்கை தெரிவித்தார்.

**அநுரகுமார மீதான...**

- இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டி – தலதா மாளிகையில் நேற்று செவ்வாய்க்கிழமை மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"சுதந்திரத்தின் பின்னரான 77 ஆண்டு கால வரலாற்றில் பல கலவரங்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். இந்தப் பௌத்த பூமியில் மக்கள் விடுதலை முன்னணியும், விடுதலைப்புலிகள் அமைப்பும் ஆயுத மேந்திப் போராடின. இருப்பினும் இந்த நாட்டினதும், மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்பட்டன.

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசுகள் வாக்குறுதிகளை முன்னிலைப்படுத்தியே ஆட்சிக்கு வந்தன. அவர்களே நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்து நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளினார்கள். நாட்டின் இறையாண்மையை சர்வதேச நாணய நிதியத்திடம் வழங்கி, நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையின் தேவைக்கேற்ப நாடு நிர்வகிக்கப்படுகின்றது.

தேர்தல் காலத்தில் மாத்திரம் கொள்கைகளை வெளியிடாமல் உண்மையான கொள்கையுடன் செயற்பட வேண்டும். தேர்தல் காலத்தில் முன்வைக்கும் கொள்கைகள் நாட்டின் அரசமைப்பு மற்றும் பொதுச் சட்டத்துக்கு இயைவானதாகக் காணப்பட வேண்டும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு மாறாகச் செயற்படும் அரசியல்வாதிகளுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவர்களின் பதவிகள் பறிக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்." – என்றார்.

**சுதந்திர தின...**

சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் தாம் தொடர்ந்தும் பங்கேற்றது அது தமது கடமை என்பதால் என்று சுட்டிக்காட்டிய கயந்த கருணாதிலகஎம்.பி., ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இருக்கும்போது ஒருபோதும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

நேற்று சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக, ஹர்ஷ டி சில்வா, சமிந்த்ராணி கிரியெல்ல, வி.இராதா கிருஷ்ணன், ரவி கருணாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மாயமான...**

கடந்த 31 ஆம் திகதி முதல் காணாமல்போயிருந்த இளைஞரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

27 வயது இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலாத்துஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## வினாத்தாள்கள் கசிவு விவகாரம்:

# கைது செய்யப்பட்ட பதில் அதிபர் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில்

வட மத்திய மாகாணத்தில் தரம் 11 இற்கான தவணைப் பரீட்சை வினாத் தாள்கள் கசிந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பதில் அதிபர் எதிர் வரும் 7 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் பிரதான நீதிவான் நாலக சஞ்சீவ ஜயசூரிய முன்னிலை யில் அவர் நேற்று பிரசன்னப்படுத் தப்பட்டதை அடுத்து இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந் தேகிக்கத்தின் பேரில் கைது செய்யப் பட்ட பதில் அதிபர் அனுராதபுரம் தம் மென்ன குளம் பகுதியைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதனிடையே, வினாத்தாள்கள் கசிந்த சம்பவத்தால் அரசுக்கு ஏற்பட்ட நிதி இழப்பு ஒன்றரை மில்லியன் ரூபாவைக் கடந்துள்ளது என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரி வித்துள்ளனர்.

இந்தநிலையில் இந்தச் சம்பவத் துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்யு மாறு அனுராதபுரம் பிரதான நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.



# மனைவியைக் கொலை செய்த கணவன் பொலிஸில் சரணடைவு

தனது மனைவியைக் கல்லால் மற்றும் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த கணவன் நேற்று செவ் வாய்க்கிழமை அதிகாலை நாவலப் பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஆஜராகி யுள்ளார் என்று நாவலப்பிட்டி பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை சம்பவம் கண்டி, நாவலப்பிட்டி பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது,

கொலை செய்யப்பட்ட மனைவி நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக நாவலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள தனது மகளின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சென்றார்.

இதன்போது, குறித்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கணவன், தனது மனைவியைக் கல்லால் மற்றும் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார்.

பின்னர் சந்தேகநபரான கணவன் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஆஜராகினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், தாக்குதலின்போது மகளுக் கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட மனைவி யும் சந்தேகநபரான கணவனும் நீண்ட காலமாகப் பிரிந்து வாழ்ந்தனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்,

பெண்ணின் சடலம் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# நாட்டின் 77 ஆவது சுதந்திர தினத்துக்கு மரியாதை செலுத்தினர் கடற்படையினர்

நாட்டின் 77 ஆவது சுதந்திர தினத்தையொட்டி நேற்று மதியம் இலங்கை கடற்படையினரால் மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

காலி முகத்திடலை அண்மித்த கடற்பகுதியில் நங்கூரமிட்டுள்ள சயுர கப்பலிலிருந்து 25 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கி வேட்டுக்களை தீர்க்கும் நடைமுறை முதன் முதலில் ரோயல் கடற்படையால் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியன்று இலங்கை சுதந்திரம் பெற்ற போது நிகழ்த்தப்பட்டது.

அன்று முதல் ஒவ்வொரு சுதந்திர தினத்திலும் நாட்டுக்காக 25 துப்பாக்கி வேட்டுக்களை தீர்க்கும் மரபினை கடற்படை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

“தேசிய மறுமலர்ச்சிக்காக அணிதிரள்வோம்” எனும் தொனிப்பொருளில் இந்தஆண்டுக்கானசுதந்திரதினநிகழ்வுகள் நடைபெற்றன.





# 5,000 டெங்கு நோயாளர்கள் ஜனவரி மாதத்தில் பதிவாகினர்

நாட்டில் இந்த ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் சுமார் 5,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாத இறுதிக்குள் 16 டெங்கு அதிக ஆபத்துள்ள வலயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது .

ஜனவரி மாதத்தில் 4,943 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்திலிருந்தே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலிருந்து 674 நோயாளர்களும், கொழும்பு மாநகர சபைப் பகுதியிலிருந்து 608 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.


காலி மாவட்டத்தில் 315 நோயாளர்களும், கண்டி மாவட்டத்தில் 303 நோயாளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 278 நோயாளர்களும், யாழ் மாவட்டத்தில் 201 நோயாளர்களும் பதிவாகியுள்ளனார் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் இரண்டு டெங்கு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

# நீர் வழங்கல் சபையின் கடன் 16 பில்லியன் ரூபாயாக உயர்வு

நிலுவையில் உள்ள நீர் கட்டணங்களைச் செலுத்தாததால், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கடன் 16 பில்லியன் ரூபாயாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டுகளில், நாடு முழுவதும் நீர் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பெறப்பட்ட கடன்களுக்கு இந்த சபை கணிசமான வட்டியைச் செலுத்த வேண்டியுள்ளதாக நீர் வழங்கல் சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.



இந்தக் கடனை நிர்வகிக்க, தங்கள் கட்டணங்களைச் செலுத்தத் தவறும் நுகர்வோரின் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்டுள்ளது.

மின்சார கட்டணங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நீர் கட்டணங்களைத் திருத்த நீர் வழங்கல் சபை தயாராகி வருகிறது.

திருத்தத்தின் சதவீதம் குறித்த சபையின் சிறப்புக் குழுவின் தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ஆரோக்கியமற்ற நிலையில் காற்றின் தரம் முகக் கவசம் அணியுமாறு அறிவுறுத்தல்

நாட்டின் பல பகுதிகளில் இன்று முதல் எதிர்வரும் சில நாட்களுக்கு காற்றின் தரமானது ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று காற்றின் தரக் குறியீடு 85 முதல் 128 இற்கு இடைப்பட்ட அளவில் இருந்தது.

இருப்பினும் வவுனியா, நுவரெலியா, புத்தளம், முல்லைத்தீவு, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களில் காற்றின் தரக் குறியீடு மிதமான மட்டத்தில் காணப்பட்டது.

இதற்கமைய தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, முடிந்தவரை அனைவரும் முகக் கவசங்களை அணியுமாறும், சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவுறுத்தியுள்ளது.



# திருமதி உலக அழகி நேற்று நாடு திரும்பினார்

அமெரிக்காவின் லொஸ் வேகாஸில் நடைபெற்ற 40 ஆவது திருமதி உலக அழகி போட்டியில் இரண்டாம் இடத்தை பிடித்த இலங்கையைச் சேர்ந்த இஷாதி அமந்தா நேற்று நாடு திரும்பினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அவரை வரவேற்க இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகத்தின் விசேட முனையத்தில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில், திருமதி உலக அழகி போட்டியின் இலங்கைக்கான பணிப்பாளர் சந்திமல் ஜயசிங்க மற்றும் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் ருக்மல் சேநானாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, திருமதி உலக அழகி போட்டியில் தென் ஆபிரிக்கா முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உப்பின் விலை சடுதியாக உயர்வு

சந்தையில் 400 கிராம் உப்பு பக்கெட்டின் விலை 150 முதல் 160 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகக் கடை உரிமையாளர்களும் நுகர்வோரும் கூறுகின்றனர்.

ஒரு கிலோ உப்பு பக்கெட்டுகளுக்கு பற்றாக்குறை இருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டில் நிலவும் உப்புப் பற்றாக்குறைக்குத் தீர்வாக, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உப்பைச் சந்தையில் வாங்கும் வாய்ப்பு இப்போது மக்களுக்குக் கிடைத்துள்ளது.

நாட்டில் வருடாந்த உப்பு நுகர்வு சுமார் 180,000 மெட்ரிக் தொன் ஆகும்.

மேலும் கடந்த ஆண்டு பிற்பகுதியிலிருந்து ஏற்பட்ட சீரற்ற காலநிலையின் காரணமாக உப்பு உற்பத்தி வேகமாகக் குறைந்துள்ளது.

எதிர்பார்த்த அளவு உப்பு உற்பத்தி செய்ய முடியாமல் போனதால் நாட்டில் உப்பு பற்றாக் குறைக்கு ஒரு தீர்வாக, 15 ஆண்டுகளுக்குப் பிறகு உப்பை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

30,000 மெட்ரிக் டொன் உப்பு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்காக இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது சந்தையில் 400 கிராம் எடையுள்ள அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட உப்பு பக்கெட் 150 ரூபா முதல் 160 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகக் கடை உரிமையாளர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் தேவை ஒரு P2P

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெற்ற நீதிக்கான கவன வீர்ப்புப் பேரணியின் நான்காம் ஆண்டு நிறைவில் நாம் நிற்கின்றோம்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி நடத்தப்பட்ட வாகன மற்றும் நடைப்பயண எழுச்சிப் போராட்டமே பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான (P2P) கவனவீர்ப்புப் பேரணி என மெச்சப்படுகின்றது.

தமிழ்ப் பேசும் மக்களின் பூர்வீக நிலங்களின் அபகரிப்பு உள்பட இலங்கை முழுவதும் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், பல்சமய ஒன்றியங்கள் இணைந்து அனுப்பி வைத்த கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த கோரியும், வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து 2021 பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை ஐந்து நாள்கள் மக்களின் பேரெழுச்சியுடன் வெற்றிகரமாக இந்தப் பேரணியை முன்னெடுத்தன.

தமிழினத்திற்கான நீதிகோரிய அந்தப் போராட்டம் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டு, பொலிகண்டியில் வெற்றிகரமாக நிறைவடைந்த நிலையில் அதனை நினைவுப்படுத்தும் முகமாக அங்கு நினைவுக்கல் அமைக்கப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது.

பெப்ரவரி 3ஆம் திகதி அம்பாறை பொத்துவில் பிரதேசத்தில் ஆரம்பமான இந்தப் பேரணி, பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் என பலர் ஏற்படுத்திய தடைகளைச் சந்தித்துத் தாண்டி 7 ஆம் திகதி தனது இலக்கை அடைந்தது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட முஸ்லிம் சமூகமும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைவர்களும் தங்களது ஆதரவை இதற்கு ஒன்றுபட்டு நல்கி இருந்தனர். உணர்வெழுச்சியுடன் இந்தப் போராட்டத்தில் மக்கள் பல்லாயிரக் கணக்கில் தாமாகவே முன்வந்து கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஈழத் தமிழர்களின் சுதந்திரத்திற்கான - வாழ்வியல் உரிமைகளுக்கான - ஆயுதம் தாங்கிய போராட்டம் 2009இல் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னர், சுமார் ஒரு தசாப்த காலம் கடந்து, சோர்ந்து கிடந்த ஈழத் தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கையை - வேணவாவை - அபிலாஷைகளை - பேரெழுச்சியுடன் வெளிப்படுத்தும் உணர்ச்சிப் போராட்டமாக இந்த நீண்ட நெடும் பயணக் கவன வீர்ப்பு அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசும் அதன் படைகளும் புலனாய்வுப் பிரிவினரும் தொடர்ந்து கொடுத்த அழுத்தங்களையும், அச்சுறுத்தல்களையும், நெருக்கடிகளையும் மீறி ஈழத் தமிழர்கள் ஒன்றுபட்டு நின்று தங்கள் எழுச்சியை தமது தாயக பிரதேசங்கள் முழுவதிலும் வெளிப்படுத்திய துணிச்சலான நிகழ்வாக இது கருதப்படுகிறது.

போராட்டத்தின் முடிவில் தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தும் பத்து அம்சக் கோரிக்கைகளுடன் எழுச்சிப் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

தென்னிலங்கைச் சிங்கள ஆட்சியாளர்களையும், சர்வதேச சமூகத்தையும் ஆச்சரியப்பட வைக்கத் தக்க விதத்தில் தமிழர் தேசம் ஒன்றுபட்டு எழுந்த நிகழ்வாக இது கணக்கிடப்படுகின்றது.

ஈழத் தமிழர்கள் தாங்களாகவே முன்வந்து களத்தில் குதித்துத் தங்கள் பங்களிப்பை ஒருசேர வெளிப்படுத்திய பேரெழுச்சி நடவடிக்கையாகவும் இது சரித்திரத்தில் பதிவாகியுள்ளது.

கிழக்கிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்திற்கு அரசு தரப்பு படைகளின் ஆரம்பத் தடைகளை உடைத்து, பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு துணிவை வழங்கி, அதை முன்னெடுத்தவர் அரசியல்வாதியான சாணக்கியனே. அதன் பெறுபேறைக் கடந்த தேர்தலில் அவர் நிரூபித்தும் காட்டினார்.

இன்று நெருக்கடியில் மூழ்கியிருக்கும் தமிழ் தேசியத்தின் உறுதிக்கு இப்போது இன்னொரு பொத்துவில் முதல் பொலிகண்டி வரை எழுச்சிப் பேரணி போன்ற ஒன்று தேவைப்படுகின்றது. இந்த நான்காம் ஆண்டு நிறைவு நாளில் அதை நினைவூட்ட விரும்புகிறோம்.



# வங்காலை கடற்கரையில் கனிய மணல் ஆய்வுக்கு வருகை தந்த குழுவை திருப்பி அனுப்பிய மக்கள்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் வங்காலை கிராமத்தில் கடற்கரை பகுதியில் நேற்றுப் செவ்வாய்க்கிழமை மாலை கனிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குழு ஒன்றை அக்கிராம மக்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேற்றி உள்ளனர்.

பிற்பகல் 2.30 மணியளவில் கனிய மணல் ஆராய்ச்சிக்காக குழு ஒன்று நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வங்காலை கிராமத்தில் கடற்கரை பகுதிக்கு வருகை தந்துள்ளனர்.

கிராமத்தில் உள்ள எந்த தரப்பிடமும் எவ்வித அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல் சுமார் 20 பேர் அடங்கிய குழுவினர் அவ்விடத்திற்கு வருகை தந்து கனிய மண் ஆராய்ச்சியை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் சந்தேகம் கொண்ட கிராம மக்கள் அவ்விடத்திற்கு சென்று அவர்களுடன் விசாரணைகளை முன்னெடுத்த போது, இதாம் பல்கலைக் கழகத்தில் இருந்து வருகை தந்துள்ளனர் எனவும், ஆராய்ச்சி வெற்றி பெற்றால் அங்கு கன்ய மணல் அகழ்வு முன்னெடுக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அக்கிராம மக்கள் விடயத்தை உடனடியாக வங்காலை பங்குத்தந்தை அருட்தந்தை லக்கோன்ஸ் அடிகளாரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். அருட்தந்தை சம்பவ இடத்திற்கு வருகை தந்தார்.

ஆராய்ச்சிக்காக வருகை தந்த குழுவுடன் ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி ஒருவரும் வருகை தந்திருந்தார்.

தாங்கள் உரிய அனுமதியை பெற்று கொண்டு வருகை தந்துள்ளனர் என அக்குழுவினர் தெரிவித்த போதும் எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளாத நிலையில் அவர்கள் வருகை தந்தமை தெரிய வந்துள்ளது.

அப்பகுதி மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கனிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குறித்த குழுவினர் அங்கிருந்து சென்றனர்.

மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை முன்னெடுத்து வரும் நிலையில் மன்னார் தீவுக்கு வெளியில் பெருநிலப்பரப்பில் இந்த ஆராய்ச்சி நடவடிக்கை முன்னெடுக்க இருந்தமை அக்கிராம மக்கள் மத்தியில் பாரிய விசனத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார் விடத்தல்தீவு குளப்பகுதியில் நேற்று 28 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட விடத்தல் தீவு குளப் பகுதியில் சுமார் 42 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை நேற்று செவ்வாய்க்கிழமை காலை அடம்பன் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மன்னார், அடம்பன் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை விடத்தல் தீவு குளப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 13 பொதிகளை கொண்ட கேரள கஞ்சா பொதிகளை மீட்டனர்.

சுமார் 28 கிலோ எடை கொண்ட கேரள கஞ்சா பொதிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன். இதன் சந்தை பெறுமதி 42 லட்சம் ரூபா எனத் தெரிய வந்துள்ளது. எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# தமிழரின் கரிநாளான நேற்று செங்கலடியில் கவனவீர்ப்பு!

இலங்கையின் சுதந்திரநாளான நேற்றைய தினத்தை 'தமிழர் தாயகத்தின் கரிநாள' எனஒ பிரகடனப்படுத்தி வடக்கு – கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரியும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரியும் மட்டக்களப்பு செங்கலடியில் மாபெரும் கறுப்புக்கொடிப் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் ரஜனி மற்றும் உறுப்பினர்கள், தமிழ்த்தேசிய மக்கள்முன்னணி மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சுரேஷ் மற்றும் உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்ட அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள்,சிவில் அமைப்பு பிரதிநிதி சீலன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்வரும் விடயங்களை கோரிக்கைகளாக முன்வைத்துள்ளனர்:–

1. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும்.

2. தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

3. பௌத்த மயமாக்கல் உடனே நிறுத்தப்பட வேண்டும்.

4. தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடந்து வரும் நில அபகரிப்பு உடனே நிறுத்தப்பட வேண்டும்.

5. தாயக வளத்தை அபகரிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

6. தமிழர் தாயக பிரதேசத்தில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.

7. தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும்.

8. சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்துதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

9. ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

10 எமது நிலம் எமக்கு வேண்டும்.

11. தாயகம், தேசியம், அரசியல் சுயநிர்ணயம் என்பன எமது உரிமைகள். அவற்றை உடனே அங்கீகரிக்க வேண்டும்.

12. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

13 சர்வதேசம், வட்டுக்கோட்டை தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டும்.

14. எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க சர்வதேச நியமங்களுக்கு அமைய எமது தாயக பிரதேசத்தில் பொதுசன வாக்கெடுப்பு நடத்துமாறு சர்வதேசத்தை கோருகிறோம்.

15. இலங்கையின் சுதந்திரநாள் தமிழர்களுக்கு கரிநாள்.

16. மயிலத்தமடு மாதவனை மேச்சல் தரைகளை அபகரிக்காதே.











# லண்டனில் கரிநாள் நிகழ்வு

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று லண்டனில் வாழும் ஈழத் தமிழர்களும் கரிநாளாக அனுஷ்டித்தனர்.

இதனை ஒட்டி ‘தன்னாட்சிக்கான உரிமைக்குரல்’ என்ற பெயரில் பெரும் எண்ணிக்கையான ஈழத் தமிழர்கள் பிரித்தானியாவில் உள்ள சிறிலங்கா தூதரகத்துக்கு முன்னாள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் பிரித்தானியப் பிரதமர் இல்லம் வரை அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

இலங்கையின் சுதந்திரமான நேற்று தமிழ் மக்களினது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி லண்டனில் பாரிய பேரணியொன்று இடம்பெற்றதாக் ஐக்கிய இராச்சியத்தின் ஈழத்தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இந்த பேரணியின் பின்னர் தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையை மீள பெற்றுக்கொள்வதற்கு உதவ வேண்டிய கடப்பாடு பிரிட்டனிற்கு உள்ளதை வலியுறுத்தி பிரிட்டிஷ் பிரதமருக்கும் மன்னர் சார்ல்ஸ் மற்றும் உயரதிகாரிகளிற்கு கடிதமொன்றை ஏற்பாட்டாளர்கள் வழங்கினர்.

இந்த நிகழ்வில் உலகளாவிய புலம்பெயர் தமிழர்கள் கலந்துகொண்டு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர்.












# ஆஸியிலும் நேற்று எதிர்ப்பு நடவடிக்கை

ஆஸ்திரேலியாவில் நேற்று இடம்பெற்ற ஈழத் தமிழர் ஒடுக்கு முறைக்கு எதிரான தினப் பேரணியின் பின்னர் இனப்படுகொலை அறிக்கை யொன்று ஆஸ்திரேலிய நாடாளு மன்றத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஏதிலிகள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று தமிழர் ஒடுக்குமுறை நாள் பேரணி இடம்பெற்றது.

ஈழ தமிழ் மக்களிற்கு எதிரான 77 வருட இனப்படுகொலையை நினைவு கூரும் வகையில் நேற்று ஆஸ்திரே லியாவின் கான்பெராவில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு வெளியே தமிழர் ஒடுக்குமுறை தினப் பேரணி இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் நூ றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு நீதி, பொறுப்புக்கூறலை கோரியமையுடன் இலங்கை அர சாங்கத்தின் கீழ் தொடர்ந்தும் ஒடுக்கு முறையை அனுபவிக்கும் தமிழ் அக திகளிற்கு பாதுகாப்பையும் கோரி னார்கள்.

இந்த பேரணியின் பின்னர் அதில் கலந்துகொண்டவர்கள் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்திற்குள் சென்று ஈழ தமிழர்களிற்கு எதிராக திட்டமிட்ட முறையில் இனப்படுகொலை முன்னெ டுக்கப்படுவதை வெளிப்படுத்தும் ஆவணத்தை ஆஸ்திரேலிய நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

தமிழர் ஏதிலிகள் பேரவையால் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணம் இலங்கையில் தமிழர்களிற்கு எதிரான திட்டமிடப்பட்ட இனப்படுகொலை குறித்து தெளிவான பல விடயங்களை உள்ளடக் கியுள்ளதுடன் ஏன் தமிழ அகதிகளை திருப்பி அனுப்புவது ஆபத்தானது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.







இலங்கையின் தசாப்தகால யுத்தக் குற்றங்கள், பலவந்தமாக காணாமல்போகச்செய்தல், இராணுவ ஆக்கிரமிப்புகள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை துல்லியமாக பதிவு செய்துள்ள இந்த ஆவணம் இலங்கை அரசாங்கத்தை ஆஸ்திரே லிய அரசாங்கம் பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றது.

# சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து திமுத் கருணாரத்ன ஓய்வுபெற தீர்மானம்

டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் திமுத் கருணாரத்ன சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக காலியில் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியுடன் அவர் சர்வதேச அரங்குக்கு விடை கொடுக்க வுள்ளார்.

நாளை அவுஸ்திரேலியாவிற்கு எதிராக காலியில் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி திமுத் கருணாரத்னவின் நூறாவது டெஸ்ட் போட்டியாக அமையவுள்ளது.

36 வயதான திமுத் கருணாரத்ன 99 டெஸ்ட் போட்டிகளில் 7172 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.




# சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழில் 17 கைதிகள் விடுதலை

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 17 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.இந்திரகுமார் தலைமையில் கைதிகள் விடுவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இவர்களில் பெண் ஒருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

நேற்று 285 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# அம்பலாந்தோட்டை முக்கொலைச் சம்பவம்: சந்தேகநபர்களுக்கு 13 வரை விளக்கமறியல்

அம்பலாந்தோட்டை – மாமடல பகுதியில் கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டு மூவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்கள் நேற்று அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 13 வயது சிறுவனை கித்துலங்கல சிறுவர் நன்னடத்தை இல்லத்துக்கு அனுப்புவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபான வியாபாரம் தொடர்பாக இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமான இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவத்தில் 29, 39 மற்றும் 45 வயதுடைய மாமடல பகுதியைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டனர்.



# ஹினிதும முக்கொலை சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணை

ஹினிதுமயில் இடம்பெற்ற முக்கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கொலைச்சம்பவம் தொடர்பாக பல தகவல்கள் வெளியாகியுள்ளன என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஹினிதும மஹாபோதிவத்த பகுதியில் கைவிடப்பட்ட விடுதியொன்றில் கடந்த 30 ஆம் திகதி இரவு இந்த கொலைச்சம்பவம் இடம்பெற்றது.

முன்னாள் அமைச்சர் ஒருவரின் செயலாளர் என கூறப்படும் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மோசடி தொடர்பில் ஏற்பட்ட தகராறை அடிப்படையாகக் கொண்டே இந்த மோதல் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பனங்கல மஹாபோதிவத்தையைச் சேர்ந்த 55 வயதான விடுதியின் உரிமையாளர், ஹினிதும நெவதிமுல்லை பகுதியைச் சேர்ந்த ஒருவர் மற்றும் அம்பலன்கொட பிரதேசத்தை சேர்ந்த ஒருவருமே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.

இவ்வாறு உயிரிழந்த மூவரில் அம்பலாங்கொடையைச் சேர்ந்த நெவில் என்பவர் தாம் வெளிநாடு செல்லும் நோக்கில் 15 லட்சம் ரூபாவையும் அவரின் சகோதரரை வெளிநாட்டுக்கு அனுப்பும் நோக்கில் 13 லட்சம் ரூபாவையும் விடுதியின் உரிமையாளர் ஊடாக பிறிதொருவருக்கு வழங்கியுள்ளமை தொலைபேசி தரவுகள் உள்ளிட்ட பகுப்பாய்வு விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட குற்றவாளிகள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# பாரிஸில் முதியோர் காப்பகத்தில் தீ விபத்து; மூவர் உயிரிழப்பு




பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள ஒரு அடுக்குமாடி கட்டடத்தில் உள்ள முதியோர் காப்பகத்தில் பற்றிய தீயினால் மூன்று முதியவர்கள் கருகி உயிரிழந்துள்ளனர். மேலும் 09 பேர் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி காப்பகத்தில் 75 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்த காப்பகத்தில் உள்ள சலவை அறையிலேயே திடீரென தீப்பிடித்தது.

பின்னர் வேகமாக ஏனைய பகுதிகளுக்கும் தீ பரவியது. இதனால் அங்கிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியேறினர். இதனையடுத்து அங்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பீய்ச்சியடித்தனர்.

அவர்களின் சில மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ அணைக்கப்பட்டது. ஆனால் அதற்குள் தீயில் கருகி 3 முதியவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 9 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவில் 50 பலஸ்தீனியர்கள் பலி





இஸ்ரேல் இராணுவத்தினர் காசாவில் நடாத்திய தாக்குதலில் 50 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் – காஸா போர் நிறுத்தம் நடைமுறையி உள்ள நிலையில், நேற்று முன்தினம் மேற்கு கடற்கரை பகுதியில் இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் ஜெனின், துல்கரேம் மற்றும் தமுன் பகுதியில் இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிச் சண்டை மற்றும் ஆளில்லப விமான தாக்குதலில் 50 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் ஜெனின் அகதிகள் உள்ள முகாம் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 20 கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன. மேலும் பலஸ்தீனர்கள் 100 பேரை இஸ்ரேல் இராணுவத்தினர் சிறை பிடித்து வைத்துள்ளதுடன், அவர்களிடம் இருந்து 40 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் பறிமுதல் செய்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சுவீடனில் பாடசாலை ஒன்றில் துப்பாக்கிச் சூடு; ஐவர் காயம்!

சுவீடனில் உள்ள பாடசாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

அந்த நாட்டு நேரப்படி நேற்று பிற்பகல் 1 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என அந்த நாட்டு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், ஆபத்து இன்னும் குறையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மக்களை வீட்டுக்குள்ளேயே இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களின் நிலைமை தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

# டொனால்ட் ட்ரம்பை சந்திக்கவுள்ளார் மோடி



அமெரிக்காவுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 13 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்து பல முக்கியமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதைத் தொடர்ந்து அவருடன் இந்தியப் பிரதமர் மோடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தினர். இதுகுறித்து டொனால்ட் ட்ரம்ப் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது 'அமெரிக்கா, இந்தியா இடையே நல்லுறவு நீடிக்கிறது. பெப்ரவரி மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வெள்ளை மாளிகைக்கு வருவார்" எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் எதிர்வரும் 10 ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் பங்கேற்கவுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அங்கிருந்து 12 ஆம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து 13 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனவும் அன்றிரவு ட்ரம்ப் சார்பில் மோடிக்கு சிறப்பு இரவு விருந்து அளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 14 ஆம் திகதி அமெரிக்க தொழிலதிபர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினரை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவுக்கு பிரதமர் மோடி அழைக்கப்படாத நிலையில், நடைபெறவுள்ள இந்த சந்திப்பானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

# சீனா இந்தியாவை விட முன்னிலையில் உள்ளது

## மக்களவையில் ராகுல் காந்தி தெரிவிப்பு



"சீனா கடந்த 10 ஆண்டுகளாக ரோபோக்கள், மோட்டார்கள் உள்ளிட்ட துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நாம் இந்தத் துறைகளில் பின்தங்கியுள்ளோம்."

– இவ்வாறு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மக்களவையில் குற்றம்சாட்டினார்.

இதுதொடர்பில் மக்களவையில் ராகுல் காந்தி மேலும் உரையாற்றுகையில்,

"இந்தியாவில் தயாரிப்போம் என்ற பெயரிலான மேக் இன் இந்தியா திட்டத்தைப் பிரதமர் மோடி கொண்டு வந்தார். அது நல்ல யோசனை என்று நினைக்கிறேன். ஆனால், 2014 இல் 15.3 வீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி, இன்று 12.6 வீதமாக குறைந்துள்ளது. கடந்த 60 ஆண்டுகளில் உற்பத்தியில் இது தான் மிக குறைவானதாகும். இதற்காக நான் பிரதமரைக் குறை கூறவில்லை, அவர் முயற்சிக்கவில்லை என்று கூறுவது நியாயமாக இருக்காது. பிரதமர் முயற்சி செய்தார். ஆனால் அவர் தோல்வியடைந்தார் என்று என்னால் கூற முடியும். இந்தியாவில் தயாரிப்போம் (மேக் இன் இந்தியா) திட்டத்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

சீனா இந்த இடத்தில் இந்தியாவை விட குறைந்தது 10 வருடங்கள் முன்னிலையில் உள்ளது. சீனா கடந்த 10 ஆண்டுகளாக ரோபோக்கள், மோட்டார்கள் போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நாம் இந்தத் துறைகளில் பின்தங்கியுள்ளோம்.

உற்பத்தி துறையில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும். நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்கள் சீனாவுக்கு சென்றுவிட்டன. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்கள் சீனாவில் உற்பத்தி செய்யப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. செல்போனின் அனைத்து பாகங்களும் சீனாவில் தயாரிக்கப்பட்டு, இந்தியாவில் 'அசெம்பிள்' மட்டுமே செய்யப்படுகின்றன. இந்தியாவில் நுகர்வோர் அதிகமாக உள்ளனர். ஆனால் உற்பத்தி முழுதும் சீனாவிடம் உள்ளது.

நமது நாடு, அதிவேகமாக பொருளாதாரத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், உலகம் முழுவதும் எதிர்கொள்கிற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பின்மை பிரச்சினையை நாமும் சந்திக்கிறோம். முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாகட்டும்(காங்கிரஸ் தலைமையிலான அரசு). தற்போதைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாகட்டும் வேலைவாய்ப்பின்மை தொடர்பாக இந்த நாட்டு இளைஞர்களுக்கு தெள்ளத் தெளிவான பதில் எதையுமே தரவில்லை.

மக்களவைத் தேர்தலுக்கு முன்னர் 400 இடங்களைக் கைப்பற்றுவோம். அரசியல் சாசனத்தை திருத்தி எழுதுவோம் என பா.ஜ.க. தலைவர்கள் கூறிக்கொண்டிருந்தனர். ஆனால் பிரதமர் நரேந்திர மோடி, நாடாளுமன்றத்துக்குள் நுழையும் போது அரசியல் சாசனத்தை குனிந்து தலைவணங்கியதைப் பார்த்து மகிழ்ந்தேன். அப்போது எங்களுக்கு பெருமிதமாக இருந்தது. அரசியல் சாசனத்தை எந்த ஒரு சக்தியுமே அசைத்துப் பார்க்க முடியாது என்பதை நாட்டு மக்களும் காங்கிரஸும் பிரதமர் மோடிக்கு விளக்கமாக சொல்லிவிட்டதை உணர முடிந்தது. உங்களால் அரசியல் சாசனத்தை ஒரு போதும் திருத்திவிட முடியும் என கனவிலும் நினைக்க முடியாது.

இந்திய நிலப்பகுதியை சீனா ஆக்கிரமித்துள்ளது என்பதை பிரதமர் மோடி மறுக்கிறார். ஆனால், பிரதமரின் கூற்றை ஏற்காத ராணுவம், 4000 சதுர கிலோ மீற்றர் பரப்பை சீனா ஆக்கிரமித்துள்ளதாக கூறுகிறது. இதை இராணுவ தளபதியே தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் உற்பத்தி, தொழில்நுட்பத்தில் முன்னேறி இருந்தால், அமெரிக்க ஜனாதிபதியின் பதிவியேற்பு விழாவுக்கு நமது பிரதமரை அழைக்க வேண்டும் என்பதற்காக நாம் நமது வெளியுறவு அமைச்சரை அனுப்ப மாட்டோம். மாறாக அமெரிக்க ஜனாதிபதி இங்கு வந்து நமது பிரதமரை அழைத்திருப்பார்." – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.02.2025




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். இன்று மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பது சிறந்தது. தெளிவான மனதின் மூலம் இன்று உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் சில கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். சூழ்நிலையை திறமையாக கையாள அல்லது தவறு நேராமல் இருக்க நீங்கள் அமைதியாக செயல்பட வேண்டும்.

உங்களின் கடுமையான தன்மை காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். உறவின் நல்லினக்கத்தை பேண இத்தகைய உணர்வை தவிர்ப்பது நல்லது.

இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு சிறிது வருத்தத்தை அளிக்கும்.




இன்று சமநிலை உணர்வு காணப்படும். உங்கள் நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பொதுவாக இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

நீங்கள் பணிகளை தரமாக முடித்து தருவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்ளும் சுறுசுறுப்பு உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேச வாய்ப்புள்ளது. இது இருவருக்குமிடையே உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் நல்ல வாய்ப்பு உள்ளது. இன்று சிறிது பணமும் சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பிரார்த்தனை மற்றும் தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் நன்மை பெறலாம். இதன் மூலம் தெளிவு கிடைக்கும். நம்பிக்கையான சிந்தனை உருவாகும்.

பணியில் உங்கள் நேர்மையான அணுகுமுறை சாதகமான பலன்களைத் தரும். பணியில் உங்களுக்கு பதவி உயர்வு கிடைக்கப் பெறலாம்.

உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இது இருவருக்குமிடையே நல்ல பிணைப்பை வளர்க்க உதவும். இன்று அதிர்ஷ்டகரமான நிதிநிலை காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்




இன்றைய செயல்களை பொறுமையுடனும் சமயோசித புத்தியுடனும் மேற்கொள்ள வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்கள் மனதில் குழப்பம் உண்டாக்கும். அத்தகைய உணர்வுக்கு ஆளாவதை தவிருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்றைய பணிகளை முடிக்க திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

உங்கள் உறவில் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் ஒத்துப் போக உண்மையான முயற்சி எடுக்கவும்.

இன்று பணம் சம்பாதிக்க குறைந்த வாய்ப்பே உள்ளது. பணம் சேமிப்பதும் கடினம். நிதி சம்பந்தமான விஷயங்களில் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

சளி காரணமாக உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

பணியிடத்தில் பதட்டம் காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்தால் நற்பலன் கிடைக்கும்.

உங்கள் உறவில் மனக் குழப்பம் பாதிப்பை ஏற்படுத்தும். உங்கள் கருத்துக்களை உங்கள் துணையிடம் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிக்க தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக உங்களுக்கு கால் வலி அல்லது முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உறுதி மற்றும் நம்பிக்கை உணர்வு மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம்.

பணியிடத்தில் சிறப்பான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் பணிகளை திறமையாக துல்லியமாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் கருத்துக்களை நட்பாக பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் உறவில் அன்பும் மகிழ்ச்சியும் பொங்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. அது உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய உதவும்.

இன்றைய நாளுக்கு தேவையான ஆற்றல் உங்களிடம் நிறைந்து காணப்படும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இன்றைய நாளை சிறந்ததாக்கலாம். அதன் மூலம் ஆறுதல் மற்றும் திருப்தி கிடைக்கும். இன்று நற்பயன் காணத் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது. விருப்பமில்லாத சூழ்நிலையை திறமையாகக்கையாள அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பழகும்போது சில கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதிகம் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

எதிர்பாராத காரணங்களுக்காக அதிக செலவுகள் ஏற்படும். பண விஷயங்களை கண்காணியுங்கள்.

தோல் சம்பந்தமான பிரச்சினை உங்களை பாதிக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். அனுசரணையான போக்கின் மூலம் நன்மை கிட்டும். தடைகள் காணப்பட்டாலும் திட்டமிட்டு செயல்பட்டால் அதனை சமாளிக்க முடியும்.

கவனக்குறைவின் காரணமாக பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உறவில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் அமைதியாக அமர்ந்து கலந்து பேச வேண்டும்.

அதிகரிக்கும் செலவினங்களை எதிர்கொள்ள நேரும். பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் கையாள வேண்டும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.02.2025




இன்று சில மாற்றங்களும் சில பயணங்களும் காணப்படும். தொண்டு நடவடிக்கைகள் மூலம் மகிழ்ச்சி கிட்டும். சாதாரண செயல்களை ஆற்றுவதில் கூட தாமதங்கள் காணப்படும்.

பணியிடத்தில் சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். அமைதியாக அதனை தீர்க்க வேண்டும்.

நிதிநிலைமையில் குறைந்த வளர்ச்சி காணப்படும். இன்று பணத்தை தக்க வைத்துக் கொள்வது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஓய்வுக்கு நேரம் ஒதுக்குங்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். திறமையாக திட்டமிட்டால் வெற்றி காணலாம். உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம். நீங்கள் பணிகளை விரைவாக முடிக்க நேரலாம். உங்கள் பணிகளை எளிதாகக் கையாள உங்கள் நம்பிக்கை அணுகுமுறை உதவும்.

தம்பதியரிடையே பரஸ்பர மரியாதை காணப்படும். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்களின் பணம் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். ஸ்திரமான நிதிநிலைமைக்கான வாய்ப்பு உள்ளது.

நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு செழிப்பான நாள். தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கு உதவும் தக்க முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிக வளர்ச்சி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு மற்றும் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று அவ்வளவு எளிதாக எதையும் பெற முடியாது. எனவே கவனமாகவும் உறுதியாகவும் செயல் பட வேண்டிய நாள்.

பணியைப் பொறுத்தவரை இன்று பலன் தரும் நாளாக இருக்காது. இன்று கூடுதல் பணிகள் காணப்படும். என்றாலும் நீங்கள் முறையான திட்டமிடல் மூலம் பணிகளை கையாள்வீர்கள்.

உங்கள் தாயுடனான கருத்து வேறுபாடு வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் சூழ்நிலையை பக்குவமாக கையாள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. உங்கள் ஒவ்வொரு பணத்தையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.

# கொள்ளுப்பிட்டி விடுதியில் தங்கியிருந்த மற்றுமொரு வெளிநாட்டுப் பெண்ணும் சாவு

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்தபோது சுகயீனமுற்ற நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட மற்றுமொரு வெளிநாட்டுப் பெண்ணும் உயிரிழந்தார்.

ஜேர்மனியைச் சேர்ந்த 27 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு வந்த மூன்று வெளிநாட்டவர்கள் கொள்ளுப்பிட்டி ஆர்.ஏ.டி மெல் வீதியில் உள்ள விடுதியொன்றில் கடந்த 30ஆம் திகதி முதல் தங்கியிருந்தனர்.

30 வயதுடைய ஜேர்மனியைச் சேர்ந்த ஆண் ஒருவரும், 27 வயதுடைய அவரது மனைவியும், 24 வயதுடைய பிரித்தானியப் பெண் ஒருவரும் இவ்வாறு தங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வெளிநாட்டவர்கள் மூவரும் அந்த விடுதியின் 3ஆவது மாடியில் உள்ள அறையொன்றில் தங்கியிருந்த நிலையில், கடந்த 31ஆம் திகதி அவர்களுக்குத் திடீர் சுகவீனம் ஏற்பட்டது.

அவர்களின் உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து சிகிச்சைக்காக அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தநிலையில், அவர்களில் 24 வயதுடைய பிரித்தானியப் பெண் சிகிச்சை பலனின்றி முன்னதாக உயிரிழந்தார்.

அவரது சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த இருவரில் 27 வயதான ஜேர்மனியைச் சேர்ந்த பெண் உயிரிழந்தார்.

இதனிடையே வெளிநாட்டவர்கள் தங்கியிருந்த அறைக்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சென்று விசாரணைகளை முன்னெடுத்ததுடன், குறித்த அறை முத்திரையிடப்பட்டுள்ளது.



அந்த அறைக்குப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஒருவகையான வாயு விசிறப்பட்டுள்ளது. குறித்த வாயுவைப் பயன்படுத்திய பிறகு, அந்த அறை 72 மணிநேரம் மூடப்பட்டிருக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மூன்று வெளிநாட்டவர்களும் அந்த வாயுவைச் சுவாசித்ததன் விளைவாக நோய்வாய்ப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கான சரியான காரணம் வெளியாகாத நிலையில், உணவு விஷமானதால் குறித்த மரணங்கள் ஏற்பட்டதா என்பது குறித்தும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி மூன்று வெளிநாட்டவர்களும் உணவருந்திய உணவகத்தையும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.